**அ.வ.எண்: 48/2016** **நாள்: 09.09.2025**

பி.வா.சா.1 – முருகேசன்

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

**(I.A.No.7/2024 11.08.2025 ல் அன்று அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி அனுமதிக்கப்படுகிறது.)**

**<u>1ம் பிரதிவாதி தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி:</u>**

நான் இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி ஆவேன். பிரதிவாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். எனது தரப்பு சாட்சியை எழுத்துமூலமாக கூடுதல் நிரூபணவாக்குமூலத்தின் பேரில் நீதிமன்றத்தில் சமர்பிக்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் நான் சொல்லி தயார் செய்யப்பட்டது.

1. 23.05.2024ம் தேதிய புலத்தில் வார்டு D பிளாக் 4 டி.எஸ்.எண் 28 மற்றும் அதைச் சுற்றியுள்ள டி.எஸ்.எண்கள் 14, 29, 31, 34, 44 ஆகியவற்றை காட்டக் கூடிய Town Survey Field Register சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 07.06.2016 ம் தேதிய டி.எஸ்.எண் 28/1B ல் 1–ம் பிரதிவாதி பெயரில் உள்ள தேவகோட்டை டவுன் சர்வே ரிஜிஸ்டர் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 07.06.2016ம் தேதிய டி.எஸ்.எண் 28/1B ல் 1–ம் பிரதிவாதியின் சொத்தை காட்டக்கூடிய வரைபடம் உண்மை நகல் **பி.வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 10.09.2004ம் தேதிய இந்த எதிர்மனுதார்/பிரதிவாதி மேற்சொன்ன பிடி.ராஜன் அவர்கள் மனைவி எம்.லெட்சுமி என்பவரிடமிருந்து தாவா B செட்டியூல் சொத்தை கிரையம் பெற்றதற்கான கிரையப் பத்திரம் (ஆவண எண் 1995/2004) சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. தாவா B செட்டியூல் சொத்தில் கட்டிய வீட்டிற்கு எதிர்மனுதார்/பிரதிவாதி கட்டிய வீட்டிற்கு தேவகோட்டை நகராட்சி வழங்கிய கட்டிட அனுமதி வரைபடம் அசல் **பி.வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. தாவா B செட்டியூல் சொத்தில் கட்டிய வீட்டிற்கு எதிர்மனுதார்/பிரதிவாதி செலுத்திய வீட்டு வரி ரசீது (எண்ணிக்கை 1) அசல் **பி.வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
7. தாவா B செட்டியூல் சொத்தில் கட்டிய வீட்டிற்கு எதிர்மனுதார்/பிரதிவாதியால் செலுத்திய குடிநீர் வரி ரசீது (எண்ணிக்கை 1) அசல் **பி.வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
8. தாவா B செட்டியூல் சொத்தில் கட்டிய வீட்டிற்கு எதிர்மனுதார்/பிரதிவாதியால் செலுத்திய மின் கட்டண ரசீது (எண்ணிக்கை 1) அசல் **பி.வா.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
9. 19.10.2015 ம் தேதிய மனைவரி தோராயப் பட்டா அசல் **பி.வா.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
10. பிரதிவாதி தாவாச் சொத்திற்கு காலியிட வரி செலுத்தியதற்கான ரசீதுகள் (எண்ணிக்கை 3) அசல் **பி.வா.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
11. பிரதிவாதி தாவாச் சொத்திற்கு கட்டிட வரியை நடப்பு ஆண்டு வரை செலுத்தியதற்கான ரசீதுகள் (எண்ணிக்கை 11) அசல் **பி.வா.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>குறுக்கு விசாரணை :</u>**

1. தாவா சொத்து சம்பந்தமான விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும் அதன் சர்வே எண் 28 பிளாக் எண் 4 ஆகும். தாவா சொத்தை எப்பொழுது யாரிடம் கிரயம் வாங்கினேன் என்றால் 2004 ஆம் ஆண்டு லட்சுமி அம்மாளிடம் கிரயம் வாங்கினேன். கிரயம் வாங்கும் பொழுது என்னென்ன ஆவணங்களை பார்த்து கிரயம் வாங்கினேன் என்றால் ஏற்கனவே மேற்படி லட்சுமி அம்மாள் செட்டியாரிடம் இருந்து கிரயம் வாங்கிய ஆவணத்தை பார்த்து கிரயம் வாங்கினேன். மேற்படி லட்சுமி அம்மாள் செட்டியாரிடமிருந்து கிரயம் பெற்ற கிரைய ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எத்தனாவது ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆவணங்களை மொத்தமாக தான் கொடுத்தோம் அது குறித்து எனக்கு தெரியாது. மேற்படி லட்சுமி அம்மாள் பெற்ற கிரயம் தொடர்பாக என்ன ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் கிரைய பத்திரத்தை தாக்கல் செய்துள்ளேன். பத்திரத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

2. (சாட்சியிடம் அவர் தாக்கல் செய்த ஆவணங்கள் அனைத்தும் காண்பிக்கப்பட்டது) நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் எது லட்சுமி அம்மாள் செட்டியாரிடம் இருந்து கிரயம் பெற்ற கிரையப் பத்திரம் என்றால் அந்த ஆவணம் இதில் இல்லை. மேற்படி கிரைய ஆவணத்தை தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். பி.வா.சா.ஆ.5 ஆவணத்தின் அடிப்படையில் தாவா சொத்தில் ஒரு பகுதியை கிரையம் வாங்கி பாத்திய உரிமை கோருகிறேன் என்றால் சரிதான், மேற்படி பி.வா.சா.ஆ.5 ஆவணத்தின் அசல் எங்கு உள்ளது என்றால் வங்கியில் கடன் பெற்றதால் வங்கியில் உள்ளது. நான் தாவா சொத்தை வைத்து வங்கியில் கடன் பெற்றுள்ளேன் என்ற விஷயத்தை நான் தாக்கல் செய்த எதிர் வழக்குரையிலோ நிரூபன வாக்குமூலத்திலோ கூறியிருக்கிறேனா என்றால் இல்லை. நான் எந்த வங்கியில் எந்த வருடத்தில் தாவா சொத்தை வைத்து கடன் பெற்றேன் என்றால் சுமார் 4 1/2 வருடங்களுக்கு முன்பு எக்குடாஸ் வங்கியில் கடன் பெற்றேன். நான் தாக்கல் செய்துள்ள மற்ற ஆவணங்கள் பி.வா.சா.ஆ.5 ஆவணத்திற்குப் பின்பு உற்பத்தி செய்து தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான், பி.வா.சா.ஆ.5 அடிப்படையில் மேற்படி ஆவணங்களை நான் வாங்கினேன்.

3. பி.வா.சா.ஆ.1 ஆவணம் சாட்சிகளிடம் காட்டப்பட்டது மேற்படி ஆவணம் என்னவென்று தெரிகிறதா என்றால் தாவா சொத்தின் வில்லங்கச் சான்றிதழாகும். மேற்படி ஆவணம் எந்த தேதியில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது யார் செய்த மனுவின் பேரில் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சுகுமார் தந்தை பெயர் சோமசுந்தரம் என்பவர் தாக்கல் செய்த மனுவின் பெயரில் 15.05.2012 ஆம் தேதி உருவாக்கப்பட்ட ஆவணமாகும். மேற்படி ஆவணத்தில் நான் லட்சுமி அம்மாவிடம் கிரைய பெற்றதற்கான குறிப்பு உள்ளதா என்றால் உள்ளது தாவா சொத்தை லட்சுமி அம்மாள் செட்டியாரிடம் இருந்து கிரயம் பெற்று இருந்தால் அது குறித்த குறிப்பு ஆவணத்தில் இருந்திருக்கும் என்றால் சரிதான். ஆனால் அத்தகைய குறிப்பு மேற்படி ஆவணத்தில் இல்லை என்றால் அவர்கள் அந்த காலத்தில் எழுதி கொடுத்ததன் படி கிரையம் வாங்கினார்கள்.

4. மேற்படி லட்சுமி அம்மாள் செட்டியாரிடம் எந்த ஆவணத்தில் எவ்வளவு தொகைக்கு கிரயம் பெற்றார் என்றால் அது குறித்து விவரம் எனக்கு தெரியும் ஆனால் தற்போது நினைவில் இல்லை, அவர்கள் 1997 ஆம் ஆண்டு தாவா சொத்தை கிரயம் வாங்கினார்கள். நான் தாவா சொத்தின்

ஒரு பகுதியில் எந்த வருடம் வீடு கட்டினேன் என்றால் சுமார் பத்து வருடங்களுக்கு முன்பு கட்டினேன். எந்த வருடத்தில் இருந்து வீட்டு வரி ரசீது செலுத்தி வருகிறேன் என்றால் 2015 ஆம் ஆண்டு முதல் செலுத்தி வருகிறேன். தாவா சொத்தை எந்த வருடம் உட்பிரிவு செய்து எனக்கு பட்டா வழங்கினார்கள் என்றால் நான் வீடு கட்டிய இரண்டு வருடங்கள் கழித்து உட்பிரிவு செய்து பட்டா வழங்கினார்கள். 2017 ஆம் ஆண்டு தான் உட்பிரிவு செய்யப்பட்டு பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். தாவா வழக்கு எந்த ஆண்டு தாக்கல் செய்யப்பட்டது என்றால் 2016 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டது. நான் தாவா சொத்தை கிரையம் வாங்கும் போது லட்சுமி அம்மாள் செட்டியாரிடம் கிரியை பெற்ற ஆவணத்தை தவிர வேறு ஏதும் ஆவணத்தை பார்த்து கிரயம் வாங்கினேன் என்றால் இல்லை. வெள்ளையன் செட்டியாருக்கு எத்தனை வாரிசுகள் என்று தெரியுமா என்றால் அவருக்கு மூன்று வாரிசுகள், அவர்கள் நாராயணன் செட்டியார் சோமநாதன் செட்டியார் மற்றொருவர் பெயர் நினைவில் இல்லை. மேற்படி வெள்ளையன் செட்டியாரின் வாரிசுகளை நான் நேரில் சந்தித்துள்ளேன் என்றால் இல்லை, லட்சுமி அம்மாளை மட்டுமே பார்த்து கிரையம் வாங்கினேன். கிரையம் வாங்கிய பின்பு மேற்படி வெள்ளையன் செட்டியாரின் வாரிசுகளையோ அவர்களின் பேரன்களையோ நான் பார்த்து உள்ளேனா என்றால் பார்த்ததில்லை.

5. நான் எனது நிரூபன வாக்குமூலத்தில் கூறியுள்ளபடி தாவா சொத்து சம்பந்தமாக வெள்ளையன் செட்டியார் குடும்பத்தினருக்குள் ஏற்பட்ட பாகப்பிரிவினை குறித்து எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் லட்சுமி அம்மாள் சொல்லி தெரியும். லட்சுமி அம்மாள் சொல்லி தான் மேற்படி பாகப்பிரிவினை குறித்து எனக்கு தெரியும் என்று எனது நிரூபன வாக்குமூலத்திலோ எதிர் வழக்குரையிலோ குறிப்பிட்டுள்ளேனா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. தாவா சொத்தை எனக்கு கிரையம் கொடுப்பதற்கு முன்பு லட்சுமி அம்மாள் அதனை வரி வகையறா செலுத்தி அனுபவம் செய்து வந்தார் என்று என் எதிர் வழக்குரையில் நான் குறிப்பிட்டிருப்பது குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி லட்சுமி அம்மாள் செலுத்திய வரி ரசீதுகள் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது குறித்து எனக்கு தெரியவில்லை தேவைப்பட்டால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

6. நான் கிரயம் பெற்ற தாவா சொத்தின் ஒரு பகுதியானது நாராயணன் செட்டியாருக்கு பாத்தியப்பட்டது என்று எனது எதிர் வழக்குரையிலும் நிரூபன வாக்குமூலத்திலும் குறிப்பிட்டுள்ளேன் என்றும் அதற்கான ஆவணங்கள் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது லட்சுமி அம்மாவிடம் தான் உள்ளது அதை இன்னும் நான் வாங்கவில்லை. மேற்கூறிய ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய எனக்கு எவ்வளவு கால அவகாசம் தேவைப்படும் என்றால் ஒரு மாத காலத்திற்குள் நான் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். நான் தாவா சொத்தை கிரயம் பெற்ற லட்சுமி அம்மாளை எனது தரப்பு சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேன் என்றால் அவர் வெளியூரில் உள்ளார் உடல்நிலை சரியில்லாமல் உள்ளார். தாவா வழக்கு நடக்கும் விவரம் லட்சுமி அம்மாலுக்கு தெரியும் என்றால் சரிதான்.

7. தாவா சொத்தில் லட்சுமி அம்மாளுக்கு உரிமை இருந்திருந்தால் அவரே தாவா சொத்து சம்பந்தமான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பார் என்றால் அவர்தான் என்னை வழக்கை பார்க்கச் சொன்னார். லட்சுமி அம்மாளுக்கு கிரயம் கொடுத்ததாக சொல்லும் நாராயண செட்டியார் தற்பொழுது உயிருடன் தான் உள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்தில் நாராயணன் செட்டியாருக்கு உரிமை இருந்திருந்தால் அவரே நேரில் ஆஜராகி தாவா வழக்கை நடத்தி இருப்பார் என்றால் அவருக்கு வழக்கு குறித்த விவரம் சொல்லி இருக்க மாட்டார்கள்.

**(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறுயொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)**